சுருக்கம்

நினைவகங்கள் – தேர்தல் வாக்குறுதி – 2011–ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தலையொட்டிய தேர்தல் வாக்குறுதி – மொழிப்போர் தியாகி திரு.அ.சிதம்பரநாதன் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் திருவுருவச்சிலை அமைப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டது – அவ்விடத்தில் அன்னாரின் முழுஉருவ வெண்கலச் சிலையை நிறுவும் பொருட்டு செலவினத் தொகை ரூ.8,50,000/–ற்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் நிர்வாக ஒப்புதல் வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தி (நினைவகங்கள்)த் துறை

அரசு ஆணை (நிலை) எண் 240 — நாள் 13.07.2012

திருவள்ளுவர் ஆண்டு 2043

ஆனி 29

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண் 190, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 14.09.2011.
2. அரசு நேர்முகக் கடித எண் 17782/நினைவகங்கள்/2011–4, நாள் 03.11.2011.
3. செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம், நாகர்கோவில் அவர்களின் கடித எண் 18/ SE/வ1/கோ,8–2/2012, நாள் 15.02.2012.
4. சென்னையைச் சேர்ந்த கிஷோர் ஜெ.நாகப்பா, (நாகப்பா ஸ்கல்ப்சர்ஸ்), அவர்களின் 09.01.2012 நாளிட்ட கடிதம்.

******

ஆணை:

2011–ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போதும், 12.09.2011 அன்று தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டோடு இணைய போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்கு களியக்காவிளையில் திருவுருவச்சிலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

2. அதனைத் தொடர்ந்து, முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டோடு இணைய போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளையில் சிலை அமைப்பதற்கான ஆணை வெளியிடப்பட்டது.

த.பி.பா.

3. இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் முழு உருவ மாதிரி புகைப்படம் மற்றும் சிலை வடிவமைப்பதற்கு திட்ட மதிப்பீடு கோரப்பட்டது. அதன்படி பெறப்பட்ட முழு உருவ மாதிரி புகைப்படத்திற்கு மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

4. மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், நாகர்கோவில் செயற் பொறியாளர், பொதுப்பணித் துறை (கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம்) அவர்கள் மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களின் முழு உருவ வெண்கலச்சிலை நிறுவ விலைப் புள்ளிகள் கோரப்பட்டு சென்னையைச் சேர்ந்த திருவாளர்கள் நாகப்பா ஸ்கல்ப்சர்ஸ் அவர்களிடமிருந்து பெறப்பட்ட குறைந்த விலைப்புள்ளி தொகையான ரூ.3,25,800/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எண்ணூறு மட்டும்) உடன் இதர செலவினங்களான நினைவு பீட அடித்தளம், காண்கிரீட் சிலை தாங்கு தூண், சிலையின் பாதுகாப்பு மேற்தடுப்பு மற்றும் ஏறி இறங்க கைப்பிடி அமைப்பு என அனைத்துப் பணிகளையும் உள்ளடக்கிய 2011–2012–ஆம் ஆண்டிற்கான விலை விகிதாச்சாரத்தின்படி தயாரித்து அனுப்பப்பட்ட திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.8,75,000/– மேற்கொள்வதற்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் நிர்வாக அனுமதி வழங்க கோரியுள்ளார்.

5. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டோடு இணைய பாடுபட்ட மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களின் முழு உருவ வெண்கலச்சிலை நிறுவும் பொருட்டு, ரூ.8,50,000/–க்கு (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2059 பொதுப்பணிகள் – 80 பொது – 053 பராமரித்தலும் செப்பனிடுதலும் – I
> திட்டத்தில் சேராதது AH – நினைவுச் சின்னங்களைப் பராமரித்தல் 17 சிறு
> பணிகள் (துதொகு 2059–80–053– AH 1701)"

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் 2012–2013 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், பத்தி 5–ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2012–2013 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (துவ,அநி(ம)செய்தித்/பொதுப்பணி–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

த.பி.பா.

8. இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சாரா எண் 36160/த.வ.அ.நி.(ம) செ(நி)த்துறை/2012, நாள் 06.07.2012 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 600 ன் (அறுநூறு) மூலம் இசைவளித்துள்ளது.

/ஆளுநரின் ஆணைப்படி/

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்

பெறுநர்:
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, சென்னை–5.
மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.
இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், சென்னை–9
கண்காணிப்புப் பொறியாளர், கட்டடக் கட்டுமானக் கோட்டம்,
பொதுப்பணித் துறை, சென்னை–5.
செயற்பொறியாளர்,பொதுப்பணித் துறை (கட்டடம்
மற்றும் பராமரிப்பு கோட்டம்), கன்னியாகுமரி மாவட்டம்.
உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை
(கட்டடம் மற்றும் பராமரிப்பு), கன்னியாகுமரி மாவட்டம்.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.
கருவூல அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.

<u>நகல்:</u>
நிதி (வ.செ.பொ.2/பொ.ப.1/
நிதி (தவ,அநி(ம)செய்தித் துறை))த் துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை 9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம்,
சென்னை–9.
தமிழ் வளர்ச்சி,அறநிலையங்கள் (ம) செய்தி (கணக்கு/
வரவு–செலவு)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

8. இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சாரா எண் 36160/த.வ.அ.நி.(ம) செ(நி)த்துறை/2012, நாள் 06.07.2012 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண் 600 (அறுநூறு) இசைவளித்துள்ளது.

/ஆளுநரின் ஆணைப்படி/

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்

பெறுநர்:
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, சென்னை–5.
மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.
இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், சென்னை–9
கண்காணிப்புப் பொறியாளர், கட்டடக் கட்டுமானக் கோட்டம்,
பொதுப்பணித் துறை, சென்னை–5.
செயற்பொறியாளர்,பொதுப்பணித் துறை (கட்டடம்
மற்றும் பராமரிப்பு கோட்டம்), கன்னியாகுமரி மாவட்டம்.
உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை
(கட்டடம் மற்றும் பராமரிப்பு), கன்னியாகுமரி மாவட்டம்.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.
கருவூல அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.

<u>நகல்:</u>
நிதி (வ.செ.பொ.2/பொ.ப.1/
நிதி (தவ,அநி(ம)செய்தித் துறை))த் துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை 9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம்,
சென்னை–9.
தமிழ் வளர்ச்சி,அறநிலையங்கள் (ம) செய்தி (கணக்கு/
வரவு–செலவு)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்